**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.164/2023**

**06.10.2025**

**D.W.1- ராமலட்சுமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

ராசு (எ) ஒய்யாத்தேவர் எனது அப்பா ஆவார். எனது தாத்தா பெயர் மாயாண்டித்தேவர் ஆகும். எனது தாத்தாவிற்கு எனது அப்பாவுடன் சேர்ந்து மாயாண்டி, பெரியகருப்பன் என்ற ஆண் மக்கள், மாயாக்காள், கருமயில், அங்கம்மாள் என்ற 3 பெண் மக்களும் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் காலாமாகிவிட்டார். 2வது பிரதிவாதி மாயாண்டி எனது அப்பாவுடன் பிறந்தவர் என்றால் சரிதான். 3வது பிரதிவாதி மேற்படி மாயாண்டியின் மகன் என்றால் சரிதான். தாவா சொத்தான 10 சென்டு ஆதியில் மாயாண்டித்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரித்ான. மாயாண்டித்தேவருக்கு தாவா சொத்தை தவிர அதனருகாமையில் எவ்வளவு விஸ்தீரண சொத்துக்கள் பாத்தியமாக இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 12.03.1990ம் தேதியில் மாயாண்டித்தேவரும், அவரது ஆண் மக்களும் பாகவிஸ்தி பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகவிஸ்தி பத்திரம் வா.சா.ஆ.2 ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்து 10 சென்டையும் சேர்த்து எனது தாத்தா மாயாண்டித்தேவருக்கு 50 சென்டு நிலம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் மொத்தமுள்ள 50 சென்டு நிலத்தில் மாயாண்டித்தேவருக்கு ஏ செட்டியூல் பாகமாக மேற்கு பக்கம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பி செட்டியூல் பாகமாக ராசு (எ) ஒய்யாத்தேவருக்கு 10 சென்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சி செட்டியூல் சொத்து மாயாண்டிக்கு 10 சென்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கிழக்கு கடைசி 10 சென்டு பெரியகருப்பன் என்பவருக்கு டி செட்டியூலாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். டி செட்டியூல் சொத்து தாவா 10 சென்டு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் கண்ட சொத்துக்களை மேற்படியார்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர மேற்கு பக்கமுள்ள 40 சென்டு

நிலத்தை தனித்தனியாக வேறு மூன்றாம் நபர்களுக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர் என்றால் சரிதான். பெரியகருப்பன் அவரது பாக சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். 21.07.1999ல் பெரியகருப்பன் தாவா சொத்தை அவரது சகோதரரிகளான கருமயில், மாயாக்காள் மற்றும் அங்கம்மாள் ஆகியோர்களுக்கு பதிவு உயில் பதிவு செய்து வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 18.11.1999ல் பெரியகருப்பன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பின்னர் வா.சா.ஆ.3 ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து கருமயில், மாயாக்காள் மற்றும் அங்கம்மாள் ஆகியோர்கள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 22.11.2007ல் மேற்படி மூன்று சகோதரரிகள் அவர்களுக்குள் வா.சா.ஆ.5, 6 மற்றும் 8 ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டனர் என்றால் அதுபற்றி தெரியாது. தானத்தின் அடிப்படையில் மூன்று சகோதரரிகள் சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவம் செய்துவந்தோம். 26.11.2007ல் மாயாக்காள், அவரது வாரிசுகளான செல்வக்குமார், சுரேஷ் ஆகியோர்கள், 3வது வாதிக்கு வா.சா.ஆ.7 மூலம் அவர்களின் பாகத்தினை கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 முதல் 8 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் கருமயில், அங்கம்மாள், சிவபாண்டீஸ்வரி ஆகியோர்கள் வழக்கிடை சொத்தை பொறுத்து 19.08.2011ம் தேதியில் பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.9 மூலம் ஏற்படுத்திக்கொண்டனர் என்றால் தெரியாது. வழக்கிடை சொத்துக்கள் மேற்படி மூன்று நபர்கள் பெயரில் டவுன் சர்வே ரிஜிஸ்டர் பட்டா வா.சா.ஆ.10 முதல் 12 வழங்கப்பட்டது என்றால் தெரியாது. பெரியகருப்பன் அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் ராசு (எ) ஒய்யாத்தேவர் மற்றம் மாயாண்டி ஆகியோர்களுக்கு ஆவணம் எதாவது எழுதிக்கொடுத்தாரா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. எந்த ஒரு உரிமைமாற்றம் ஏற்படாதபோது எனது தகப்பனார், எனது பெயரில் 27.09.2011ம் தேதியில் வா.சா.ஆ.13 தானசெட்டில்மென்ட் எழுதி வைக்க எந்த உரிமையும் கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 ஆவணத்தில் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு எப்படி பாத்தியம் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ,13ல் சொல்லப்பட்ட

வாசகங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் நான் மீண்டும் வேறு ஒருவருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். வா.சா.ஆ.13 ஏற்பட்ட காலத்தில் எனது தகப்பனார் பெயரில் எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் பூர்வீக சொத்து என்று தெரியும், வேறு எந்த ஆவணமும் தெரியாது. பூர்வீக சொத்தை பொறுத்து வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேற எந்த உரிமையும் எனது தகப்பனாருக்கு மாயாண்டி சொத்தில் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணம் எழுதிக்கொடுக்க எனது தகப்பானருக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றாலும், மேற்படி ஆவணம் தாவா சொத்தில் வாதிகளின் உரிமை மற்றும் அனுபவத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. 27.09.2011ல் 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.14 தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.14 ஆவணத்தை எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணம் வாதிகளின் அனுபவத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13, 14 ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், வாதிகளின் உரிமை மற்றும் அனுபவத்தை மோசடி செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு உயில் பற்றி விவரம் எனக்கு தெரியவந்தது. மேற்படி உயிலை பொறுத்து எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதிகள் தான் தாக்கல் செய்தது. பி.வா.சா.ஆ,1யை பொறுத்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ,2 ஆவணம் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பாக வழக்கிடை சொத்தை பொறுத்து பட்டா மாறுதல் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள மாயாண்டி எனது தாத்தா மாயாண்டியை குறிக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும், பதிவு செய்யப்படவில்லை என்றாலும், செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால், அதில்

இடைஞ்சல் செய்ய எனக்கு உரிமைமூலம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. 07.03.2023ல் வாதிகள் தாவா சொத்தில் கடை வைக்க முற்பட்டபோது நான் பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல. வாதிகளின் அனுபவத்தை நான் இடைஞ்சல் செய்யததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பதால் வாதிகள் கோரி பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.10.06 17:11:31 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.